RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 242 | செப்டம்பர்.3 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## முற்றுகிறதா எடப்பாடியுடனான மோதல்? செப்.5ல் மனம் திறக்கப் போவதாக செங்கோட்டையன் தகவல்



ஈரோடு, செப்.03-

செப்.5ம் தேதி மனம் திறந்து பேசப் போகிறேன் என்று அதிமுக மூத்த தலைவரும், முன்னாள் அமைச்சருமான செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

அதிமுக முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனுக்கும், பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கும் இடையே கடந்த சில மாதங்களாகவே கருத்து மோதல் இருந்து வருகிறது. இந்நிலையில் கடந்த பிப்ரவரி மாதம் அத்திக்கடவு அவிநாசி திட்டம் நிறைவேற்றியதற்காக இபிஎஸ்க்கு பாராட்டு விழா நடைபெற்றது. அன்னூரில் நடந்த அந்தப் பாராட்டு விழாவில், மேடையில் மறைந்த முன்னாள் முதல்வர்கள் எம்ஜிஆர், ஜெயலலிதாவின் புகைப்படங்கள் இல்லை என்று எதிர்ப்புக் குரல் எழுப்பினார் செங்கோட்டையன்.

அதன் பின்னர் பல்வேறு தருணங்களிலும் அவர் இபிஎஸ் மீதான அதிரு ப்தியை வெளிப்படுத்தி வந்தார். இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' பிரச்சாரப் பேரணியை இபிஎஸ் மேட்டுப்பாளையத்தில் இருந்து தொடங்கினார். அவர் இதற்காக கோபி வழியாகவே மேட்டுப்பாளையம் சென்றார். ஆனால், கோபி எல்லையில் இபிஎஸ்க்கு செங்கோட்டையன் வரவேற்பு அளிக்கவில்லை. கட்சியின் பொதுச் செயலாளரை ஒரு மூத்த தலைவர், முன்னாள் அமைச்சர் இவ்வாறாக புறக்கணித்தது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

இந்நிலையில், வெள்ளக்கோயிலில் ஒரு திருமண நிகழ்வில் செங்கோட்டையன் நேற்று பங்கேற்றார். அப்போது கட்சி நிர்வாகிகளுடனும் ஆலோசித்ததாக தகவல். தொடர்ந்து இன்றும் அவர் கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டதாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில், இன்று காலை செய்தியாளர்களை சந்தித்த செங்கோட்டையன், "ஈரோடு மாவட்டம் கோபியில் கட்சி அலுவலகத்தில் வருகிற 5ம் தேதி காலை 9 மணி அளவில் செய்தியாளர்களை சந்தித்து, மனம் திறந்து பேச உள்ளேன். அதுவரை செய்தியாளர்கள் பெறுமை காக்க வேண்டும்." என்று கேட்டுக் கொண்டார்.

கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டமா? என்ற கேள்விக்கு செய்தியாளர்கள் சந்திப்பு உள்ளது என்று மட்டும் தெரிவித்த செங்கோட்டையன், எடப்பாடி பழனிசாமி மீதான அதிருப்தி தொடர்கிறதா? என்ற கேள்விக்கு சிரித்து முகத்துடன் கையெடுத்து கும்பிட்டுச் சென்றார். அவரின் அறிவிப்பும், சூசக சிரிப்பும் அதிமுக வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

## டி.என்.எஸ்.யு.ஆர்.பி இலவச பயிற்சி வகுப்பில் சேர ஆட்சியர் அறிவுறுத்தல்



வேலூர், செப்.3-

வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த படித்த இளைஞர்கள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படவுள்ள 2ம் நிலைக்காவலர், 2ம்நிலை சிறைக்காவலர் மற்றும் தீயணைப்பாளர் தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்பில், அரசு பணியை எதிர்நோக்கி பயிற்சி பெறுபவர்கள் அதிக அளவில் கலந்து கொண்டு தேர்வுகளில் வெற்றி பெற்று அரசு வேலையை பெற்று பயனடையுமாறு வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி தெரிவித்துள்ளார்.

## வர்த்தக பயன்பாட்டுக்கான காஸ் சிலிண்டர் விலை குறைப்பு



சென்னை, செப்.03-

சென்னையில், வர்த்தக பயன்பாட்டுக்கான காஸ் சிலிண்டர் விலை ரூ.51 குறைந்து, ரூ.1,738க்கு விற்பனை செய்யப்பட்டது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை மற்றும் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றை கணக்கில் கொண்டு, எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் காஸ் சிலிண்டர்களின் விலைகளை நிர்ணயித்து வருகின்றன.

அதன்படி, இந்த மாதம் வர்த்தக பயன்பாட்டுக்கான காஸ் சிலிண்டரின் விலை குறைந்துள்ளது. கடந்த மாதம் 19 கிலோ எடை கொண்ட வர்த்தக பயன்பாட்டுக்கான காஸ் சிலிண்டர் ரூ.1,789க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில், நேற்று முதல் சிலிண்டருக்கு ரூ.51.50 குறைந்து ரூ.1,737.50க்கு விற்கப்படுகிறது. வர்த்தக பயன்பாட்டுக்கான காஸ் சிலிண்டர் கடந்த ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் குறைக்கப்பட்ட நிலையில், மார்ச் மாதம் அதிகரித்தது.

பின்னர், மீண்டும் ஏப்ரல் மாதத்தில் இருந்து தொடர்ச்சியாக குறைந்து வருகிறது. அந்த வகையில், கடந்த 6 மாதங்களில் ரூ.227 குறைந்துள்ளது. அதே நேரத்தில், வீட்டு உபயோக காஸ் சிலிண்டரின் விலையில் எந்த மாற்றமும் இல்லாமல் ரூ.868.50க்கு விற்கப்படுகிறது.



■ வேலூர் மாவட்டம் ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற குறைத்தீர்வு நாள் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் வாயிலாக நடத்தப்பட்ட 15 நாட்கள் கொண்ட தையல் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு தேர்ச்சி பெற்ற 30 பயனாளிகளுக்கு தலா ரூ.5,000/ மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்கள் மற்றும் சான்றிதழ்களை வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி,வழங்கினார். இந்நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் த.மாலதி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் ஜெயசித்ரா ஆகியோர் உடனிருந்தனர்.

# ஜெர்மனி முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழகத்துக்கு ரூ.3819 கோடி முதலீடு



சென்னை: செப்.3-

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (செப்டம்பர் 1) ஜெர்மனியில் நடைபெற்ற ஜெர்மனி முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழகத்துக்கு ரூ.3819 கோடி முதலீடுகளை உறுதி செய்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான **TN Rising Europe** முதலீட்டு இயக்கத்தின் ஒரு பகுதியாக ஜெர்மனியில் நடைபெற்ற தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.3819 கோடி மதிப்பிலான 23 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. இந்த ஒப்பந்தங்கள் தமிழ்நாட்டில் 9,070 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

இதன்மூலம், முதல்வர் ஸ்டாலினின் வருகையால் ஜெர்மனியில் 26 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் கையெழுத்திடப்பட்ட மொத்த முதலீடுகள் ரூ.7020 கோடியாக உயர்ந்து, 15,320 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளன.

இதில் நார்பிரெம்ஸ் (ரூ.2000 கோடி முதலீடு மற்றும் 3,500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), நோர்டெக்ஸ் குழுமம் (ரூ.1000 கோடி முதலீடு மற்றும் 2,500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), மற்றும் ஈபிஎம்பாப்ஸ்ட் (ரூ.201 கோடி முதலீடு மற்றும் 250 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்) ஆகிய முன்னர் கையெழுத்திடப்பட்ட மூன்று முக்கிய ஒப்பந்தங்களும் அடங்கும்.

முக்கியமாக, தமிழ்நாட்டில் ஏற்கனவே செயல்பட்டு வரும் பல நிறுவனங்கள் மீண்டும் முதலீடுகள் செய்து விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ள முன்வந்துள்ளன.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வாகன கூறுகள், தொழில்துறை உபகரணங்கள் மற்றும் மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றில் உலகளாவிய தலைவர்களை இந்த மாநாடு ஒன்றிணைத்தது. முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களாக வென்சிஸ் எனர்ஜி (ரூ.1068 கோடி முதலீடு மற்றும் 5,238 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), பிஏஎஸ்எஃப் (ரூ.300 கோடி முதலீடு மற்றும் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), பெல்லா பிரீமியர் ஹேப்பி ஹைஜீன் (ரூ.300 கோடி முதலீடு மற்றும் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), ஹெர்ரென்க்னெக்ட் இந்தியா (ரூ.250 கோடி முதலீடு மற்றும் 400 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), பல்ஸ் (ரூ.200 கோடி முதலீடு மற்றும் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), விட்சென்மேன் இந்தியா (ரூ.200 கோடி முதலீடு மற்றும் 450 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்) மற்றும் மாஷ் எனர்ஜி (ரூ.200 கோடி முதலீடு மற்றும் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்) ஆகியவை அடங்கும்.

சுகாதாரம் மற்றும் மருத்துவத் தயாரிப்புகளில் பெல்லா பிராண்டை தொடர்ந்து போலந்தை தளமாகக் கொண்ட பன்னாட்டு நிறுவனமான பெல்லா ஹைஜீன், திண்டுக்கல் மாவட்டத்தில் அதன் நவீன சுகாதாரப் பொருட்கள் உற்பத்தி வசதியை விரிவுபடுத்துகிறது.

ஆட்டோமொபைல் துறைக்கான நெகிழ்வான உலோக குழல்கள் மற்றும் விரிவாக்க இணைப்பான்களில் முன்னணியில் உள்ள ஜெர்மன் நிறுவனமான விட்சென்மேன் குழுமம், தமிழ்நாட்டில் ஆட்டோமொடிவ் மற்றும் தொழில்துறை பயன்பாடுகளுக்கான உற்பத்தியை விரிவுபடுத்துகிறது.

பிஏஎஸ்எஃப் சுற்றுச்சூழல் கேட்டலிஸ்ட் மற்றும் மெட்டல் சொல்யூஷன்ஸ் (ணிசிவிஷி) அதன் செங்கல்பட்டு உற்பத்தி ஆலையை விரிவுபடுத்துகிறது. இந்த நிறுவனம் வினையூக்கிகள், உறிஞ்சிகள், பேட்டரி பொருட்கள் மற்றும் விலைமதிப்பற்ற உலோக தீர்வுகளில் சேவைகளை அளித்து வருகிறது.

கியர் இல்லாத நேரடி இயக்கி தொழில்நுட்பத்தில் நிபுணத்துவம் பெற்ற ஜெர்மன் காற்றாலை உற்பத்தியாளரான வென்சிஸ் எனர்ஜி ஏஜி, தமிழ்நாட்டில் காற்றாலை பாகங்கள் உற்பத்தி ஆலையை அமைக்கிறது.

சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரங்களில் உலகளவில் முன்னணி நிறுவனமான ஹெர்ரென்க்னெக்ட், அதன் சென்னை ஆலையை விரிவுபடுத்துகிறது. மும்பை கடற்கரை சாலை மற்றும் சென்னை மெட்ரோ போன்ற திட்டங்களை இந்நிறுவனம் அதன் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் பாகங்கள் மூலம் செயல்படுத்தும்.

முதல்வர் ஸ்டாலின் பிஎம்டபிள்யூ குழுமத்தின் மூத்த தலைவர்களுடன் தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்வது குறித்து கலந்துரையாடினார். அப்போது ஆட்டோமொடிவ் மற்றும் மின்சார வாகன உற்பத்தியில் தமிழ்நாட்டின் சிறப்பினை எடுத்துரைத்து, பிஎம்டபிள்யூ நிறுவனம் அதன் செயல்பாட்டை தமிழ்நாட்டில் அதிகப்படுத்திட அழைப்பு விடுத்தார். இச்சந்திப்பின்போது, பிஎம்டபிள்யூ குழும நிறுவனத்தின் மூத்த தலைவர்கள், தமிழ்நாட்டின் வலுவான மின்சார வாகன உட்கட்டமைப்பை மேற்கோள் காட்டியது, மாநிலத்தின் மீதான அந்நிறுவனத்தின் ஆர்வத்தை மீண்டும் உறுதிப்படுத்தியது.

ஜெர்மனியின் இரட்டை தொழில் பயிற்சி மாதிரியை தமிழ்நாட்டிற்கு கொண்டு வருவதற்காக நெக்ஸ்ட் மிட்டல்ஸ்டாண்ட் (ஆஸ்பில்டங்) உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. 120 மாணவர்களுடன் தொடங்கி அடுத்த பத்தாண்டுகளில் 20,000 ஆக அதிகரிக்கும் இந்த திட்டம், தமிழ்நாட்டு இளைஞர்களிடையே உலகளாவிய திறன் தரத்தை உயர்த்தும்.

தமிழக முதல்வரின் ஐரோப்பா பயணம் அடுத்த கட்டமாக இங்கிலாந்து நாட்டில் தொடரும், அங்கு மேலும் பல முதலீட்டாளர்கள் சந்திப்புகள் மற்றும் இங்கிலாந்து வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்வுகளும் நடைபெறும்.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தாரேஸ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கீழக்கோட்டையில் கணித அறிவியல் பரிசோதனைகள் செய்து பார்ப்பதில் ஆர்வத்துடன் மாணவ மாணவிகள்







காளையார் கோவில். செப். 03

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் வானவில் மன்ற கணித அறிவியல் செயல்பாடுகள் நடைபெற்றது. தலைமை ஆசிரியை தெய்வானை தலைமை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி முன்னிலை வகித்தார். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா வரவேற்றார். அறிவியல் மற்றும் கணித செயல்பாடுகளை வானவில் மன்ற ஸ்டெம் கருத்தாளர் ஜெயபிரியா செய்து காண்பித்து மாணவ மாணவிகளையும் செய்து பார்க்க ஊக்குவித்தார். கணிதத்தில் பகு எண்கள் பகா எண்கள் காரணிப்படுத்துதல் அறிவியலில் ஸ்டெதஸ்கோப் இதயம் கார்பன் டை ஆக்ஸைடு வாயுவை உருவாக்குதல் விசை போன்ற செயல்பாடுகள் செய்வதில் மாணவ மாணவிகள் பயிற்சி பெற்றனர். மாணவ மாணவிகள் ஆர்வமுடன் வகுப்பறையில் செய்த செயல்பாடுகளை தானே செய்துபார்த்து மகிழ்ந்தனர். உலக தேங்காய் தின சிறப்புகள் எடுத்துக் கூறப்பட்டது. கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார். ஆசிரியைகள் வாசுகி கமலம்பாய் கணினி பயிற்றுநர் வித்யா மற்றும் கஸ்தூரி கலந்து கொண்டனர்.



■ மதுரை மாநகராட்சி மத்திய சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மண்டலம் 3 வார்டு எண்.55 வார்டுப் பகுதிகளில் மேம்பாட்டு பணிகள் குறித்து ஒவ்வொரு தெருவாரியாக மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அருகில் ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், இ.ஆ.ப., அவர்கள், தலைமை பொறியாளர் திரு.பாபு அவர்கள், உதவி ஆணையாளர் திரு.பிரபாகரன் அவர்கள், மாமன்ற உறுப்பினர் திருமதி.கு.விஜயா அவர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.




■ மதுரை திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் கிண்ணிமங்கலம், கொ.புளியங்குளம் ஊராட்சி களுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் வருவாய் வட்டாட்சியர் கிளமெண்ட் சுரேஷ்,வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரகலா,துணை வட்டார வளர்ச்சி அலுவலர் குமரவேல்,ஊராட்சி செயலாளர்கள் ஜோதிபாசு, அன்பழகன் ஆகியோர் கலந்து பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர்.முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு மனு அளித்தனர்.

# அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், என்.கயல்விழி செல்வராஜ் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.3.64 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை துவக்கி வைத்தார்கள்





திருப்பூர், செப்.03-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.இ.பிரகாஷ் அவர்கள் முன்னிலையில் திருப்பூர் மாவட்டம், கன்னிவாடி மற்றும் மூலனூர் பேரூராட்சிக்குபட்ட பகுதிகளில் 5வது நிதி ஆணைய சுகாதார மனியத்திட்டம், 15வது நிதிக்குழு மானிய திட்டம், 15வது நிதிக்குழு ஆணைய சுகாதார மான்ய திட்டம் மற்றும் அயோத்தி தாஸ் பண்டிதர் குடியிருப்பு மேமபாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.3.64 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நமது மாவட்டங்களில் இருக்கக்கூடிய திட்டப் பணிகளை அனைத்தும் விரைவாக மக்களுடைய பயன்பாட்டு ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள். அந்த வகையில் இன்றைய தினம் கன்னிவாடி மற்றும் மூலனூர் பேரூராட்சிக்குபட்ட பகுதியில் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளை துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு மின்இணைப்பு வழங்குதல், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம், பள்ளிக் குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், தமிழ்புதல்வன் திட்டம், நலம் காக்கும் ஸ்டாலின், உங்களுடன் ஸ்டாலின் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இவ்வாறு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்கள்.

ஜ தொடர்ந்து, கன்னிவாடி பேரூராட்சி, ஆரம்ப சுகாதார நிலையத்தில் 5 வது நிதி ஆணைய சுகாதார மானியம் திட்டத்தின் கீழ் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் பொது சுகாதார கட்டடம் கட்டும் பணி, மூலனூர் பேரூராட்சி மூவேந்தர் நகரில் ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மூலனூர் பேரூராட்சி, வார்டு எண்.6 மூவேந்தர் நகரில் நியாய விலைக்கடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தும், 15வது நிதிக்குழு மான்ய திட்டத்தின் கீழ் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.15 திருநீலகண்டபுரத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.6 கரூர் தாராபுரம் மெயின் சாலை முதல் நாச்சிபாளையம் சாலை வரை தார்சாலை அமைக்கும் பணி, ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.4, கணேசன்புதூரில் சிறுபாலம் பராமரிப்பு பணியினையும்,

மூலனூர் பேரூராட்சி, மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 15வது நிதிக்குழு ஆணைய சுகாதார மான்ய திட்டத்தின் கீழ் ரூ.65.00 இலட்சம் மதிப்பீட்டில் மூலனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைத்தில் பொது சுகாதார கட்டடம் மற்றும் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் பொது சுகாதார கட்டடம் கட்டும் பணியினையும்,

மூலனூர் பேரூராட்சி, கொல்லம்பட்டியில் ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் அயோத்தி தாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் வார்டு எண்.1, கொல்லம்பட்டி ஆதிதிராவிடர் காலனியில் புதிய சமுதாயக்கூடம் கட்டும் பணி, மூலனூர் பேரூராட்சி, சாணார்பாளையம் சாலையில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சாணரார்பாளையம் சாலை பி.எஸ்.என்.எல் அலுவலகம் அருகில் உயர்கோபுர விளக்குகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தும் என மொத்தம் ரூ.3.64 கோடி மதிப்பீட்டில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் திரு.இல.பத்மநாபன், மூலனூர் பேரூராட்சி தலைவர் திரு.மக்கள் தெண்டபாணி, மூலனூர் செயல் அலுவர் திருமதி சசிகலா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள் மற்றும் துறை சாரந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், திருப்பூர் மாநராட்சி 4ம் மண்டலத்தலைவர் திரு.இல.பத்மநாபன், வெள்ளகோவில் நகர்மன்றத் தலைவர் திருமதி கனியரசி முத்துக்குமார், மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சாரந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

# சுற்றுலா சார்ந்த தொழில் நிறுவனங்கள் விருது பெற விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

தேனி, செப்.03-

தமிழ்நாடு சுற்றுலாத்துறை சார்பாக, உலக சுற்றுலா தினக்கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா தொழில்முனைவோர்களுக்கு விருதுகள் வழங்கபட உள்ளது. தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் சுற்றுலா பயண முகவர்கள், விமான நிறுவனங்கள், தங்கும் விடுதிகள், உணவகங்கள், சுற்றுலா வழிகாட்டிகள் மற்றும் சுற்றுலா சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கு என மொத்தம் 48 விருதுகள் 17 வகைப்பாடுகளில் வழங்கப்படவுள்ளது.

1. சிறந்த உள்வரும் பயண முகவர்
2. சிறந்த உள்நாட்டு பயண முகவர்
3. சிறந்த பயண பங்குதாரர்
4. சிறந்த விமான நிறுவன பங்குதாரர்
5. சிறந்த தங்கும் விடுதி
6. சிறந்த உணவகம்
7. சிறந்த (Niche) சுற்றுலாத்தலம்
8. தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழக நட்சத்திர செயல்திறன்
9. சுற்றுலா ஊக்குவிப்பு விருது (சிறந்த மாவட்டம்)
10. தூய்மையான சுற்றுலாத் தலம்
11. சிறந்த சாகச சுற்றுலா மற்றும் கேம்பிங் சைட் அமைப்பாளர்கள்
12. சிறந்த (MICE) சுற்றுலா அமைப்பாளர்கள்
13. சிறந்த சமூக ஊடகவியலாளர் (Special Media Influencer)
14. சிறந்த சுற்றுலா வழிகாட்டி
15. சிறந்த சுற்றுலா விளம்பரங்கள்
16. சிறந்த சுற்றுலா மேம்பாட்டு வெளியீட்டுகள்
17. சிறந்த சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சார்ந்த கல்வி நிறுவனங்கள்

ஆகிய பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட உள்ளது. எனவே, இவ்விருது பெற விரும்பும் தேனி மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தொழில்முனைவோர்கள் www.tntourismawards.com என்ற இணையதளத்தின் வாயிலாக 15.09.2025 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்.

மேலும், கூடுதல் விபரங்களுக்கு மாவட்ட சுற்றுலா அலுவலர், தேனி அவர்களை 73977 15689 என்ற தொலைப்பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத்சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.





■ மதுரையில் தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் மாநிலத் தலைவர் முத்துவேல் ராஜன் தலைமையில் திருப்பரங்குன்றம் பெரியரத வீதியில் R.R. கம்யூனிட்டி ஹாலில்நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவீரர் வீரபாண்டிய கட்டபொம்மன், மாமன்னர் திருமலை நாயக்கர் பிறந்தநாள் விழாவிற்கான ஏற்பாடுகள், இராணிமங்கம்மாளின் அரண்மனையில் ராணி மங்கம்மாள் வீரத்தை போற்றும்வீதமாக திரு உருவசிலை அமைக்க மத்திய அரசிடம் கோரிக்கை மற்றும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.இந்நிகழ்வில் பொதுச் செயலாளர் போஸ் நாயுடு பொருளாளர் சீனிவாசன் நாயுடு, சுருதிரமேஷ், பிரபுநாயுடு, சன்னாசி, சப்னா மகாராஜன், ஜெகநாதன், ராம்குமார், சென்ராஜ்நாயுடு, ராஜேந்திரன், மற்றும் பல்வேறு மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

# திருப்பூர் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் முகாம் 02.09. 2025 மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே தகவல்

திருப்பூர், செப்.03-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப்பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தினை 15.07.2025 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்துள்ளார்கள்.

அதனை தொடர்ந்து, திருப்பூர் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 325 முகாம்கள் நடைபெற உள்ளது. குறிப்பாக, முதல்கட்டமாக 120 முகாம்கள் 15.07.2025 முதல் 14.08.2025 வரை நடைபெற்றது. மேலும், இரண்டாம்கட்டமாக 96 முகாம்கள் 15.08.2025 முதல் 14.09.2025 வரையிலும், மூன்றாம்கட்டமாக 96 முகாம்கள் 15.09.2025 முதல் 14.10.2025 வரையிலும் மற்றும் நான்காம் கட்டமாக 13 முகாம்கள் 15.10.2025 முதல் 14.11.2025 வரையிலும் நடைபெறவுள்ளது.

அந்த வகையில் இரண்டாம் கட்டமாக 02.09.2025 அன்று உடுமலைப்பேட்டை நகராட்சி, வார்டு எண்.15,16 மற்றும் 17 ஆகிய பகுதிகளுக்கு உடுமலைப் பேட்டை அரிமா சங்கத்திலும், மூலனூர் ஊராட்சி ஒன்றியம், குமாரபாளையம், வெள்ளம்பூண்டி மூலனூர் எஸ்.ஜே.எம் மஹாலிலும், அவிநாசி ஊராட்சி ஒன்றியம், சின்னேரிபாளையம், வடுகபாளையம் ஊராட்சிகளுக்கு சின்னரிபாளையம் கே.எஸ். மஹாலிலும், குண்டடம் ஊராட்சி ஒன்றியம், வடசின்னேரிபாளையம், குருகபாளையம், செங்கோடபாளையம் மற்றும் பெருமாள் பாளையம் ஊராட்சிகளுக்கு ஊதியூர் பழநி ஆண்டவர் பாதயாத்திரை குழு மண்டபத்திலும், திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் காளிபாளையம் ஊராட்சிக்கு மங்கலம் எம்.எஸ்.ஜே.எம் மஹாலிலும், காங்கேயம் ஊராட்சி ஒன்றியம் பொத்தியம்பாளையம் ஊராட்சிக்கு காங்கேயம் பழனியப்பா மஹாலிலும் நடைபெறவுள்ளது.

எனவே, திருப்பூர் மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நடைபெறவுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தில் உங்கள் பகுதிகளில் ஒதுக்கப்பட்ட நாட்களில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு உரிய ஆவணங்களுடன் தங்கள் மனுக்களை வழங்கி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.




■ மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.21 மற்றும் 22 ஆகிய பகுதிகளுக்கு அருள்தாஸ்புரம் பெரியசாமி பாக்கியலெட்சுமி திருமண மகாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக் கொண்டார் அருகில் மதிப்பிற்குரிய மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.மகாலெட்சுமி, திரு.கஜேந்திரகுமார் அவர்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

"உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானது வருகின்ற 3.9.2025அன்று

# சிவகங்கை நகராட்சி, சிங்கம்புணரி பேரூராட்சி, சாக்கோட்டை, மானாமதுரை, திருப்பத்தூர், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் குறிப்பிட்ட பகுதிகளுக்கான முகாம்கள், குறிப்பிட்ட பகுதிகளில் நடைபெறவுள்ளது

சிவகங்கை, செப்.03-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற செப்டம்பர் 3 ஆம் தேதி சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 11 முதல் 16 வரை உள்ள பகுதிகளுக்கென மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்திலும், சிங்கம்புணரி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 2 முதல் 4 வரை மற்றும் 11 முதல் 15 வரை உள்ள பகுதிகளுக்கென சேவுகமூர்த்தி கோவில் தெருவில் அமைந்துள்ள செல்வி மஹாலிலும், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வீரசேகரபுரம், சாக்காவயல் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென மேலமணக்குடி, பொன் அய்யனார் கோவில் மண்டபத்திலும், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கல்குறிச்சி ஊராட்சி பகுதிக்கென எம்.ஆர்.பி. மஹாலிலும், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இ.அம்மாபட்டி, என்.இளையாத்தங்குடி, செவினிப்பட்டி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென இ.அம்மாபட்டி ஊராட்சியில் அமைந்துள்ள தமிழ் வரவேற்புரை மஹாலிலும், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருவேகம்பத்தூர், கவாத்துக்குடி, கீழ உச்சாணி ஆகிய ஊராட்சி பகுதிகளு க்கென திருவேகம்பத்தூர் ஊராட்சியில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப்பள்ளியிலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி நிலவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.





# கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமங்களில் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் சார்பில் புதிய மின் இணைப்பு பெற்ற பயனாளிகள் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றியினை தெரிவித்தார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி, தமிழ்நாட்டுக்குட்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் பொருட்டு, பல்வேறு திட்டத்தினை அறிவித்து, மிகச்சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதனை த்தொடர்ந்து மக்களின் குறைகளை த்தீர்க்க அவர்களின் பகுதிகளிலேயே நேரிடையாக சென்று முகாம்கள் நடத்தி கோரிக்கை மனுக்களை பெற, உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்தினை 15.07.2025 அன்று கடலூர் மாவட்டம்




சிதம்பரம் நகராட்சியில் துவக்கி வைத்தார்கள்.

இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவிக்கையில்

பொதுமக்களின் வசதிக்கு கேற்ப அவர்களின் பகுதிகளுக்கு அருகாமையிலேயே தங்கள் குறைகளையும், கோரிக்கைகளையும், தேவைகளையும் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து வழங்குவதற்கு ஏற்ற வகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் வழிவகை செய்கிறது.

மேலும் அன்றாடம் பொதுமக்கள் அதிகமாக அணுகும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, உணவு வழங்கல் துறை, மின்சாரத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சி துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, மீன்வளத்துறை, சமூகநலத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மாற்றுத் திறனாளி நலத்துறை, மகளிர் உரிமைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, தொழிலாளர் நலத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு, சிறு, குறு நடுத்தர நிறுவனங்கள் துறை, மாவட்ட தொழில் மையம், கால்நடை பாரமரிப்புத்துறை, அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியம், உள்ளிட்ட அரசு துறைகளை சார்ந்த சேவைகள் தொடர்பான கோரிக்கை மனுக்கள் பெறப்படுகின்றன. நகரப் பகுதிகளில் 13 அரசுத் துறைகளின் 43 சேவைகள், கிராமப் பகுதிகளில் 14 அரசுத் துறைகளின் 46 சேவைகள் வழங்கப்படும்.

உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 6 வட்டங்களில் 15.07.2025 அன்று முதல் நடைபெற்று வருகிறது. நடைபெற்று முடிந்த முகாம்களில் எரிசக்தி துறை சார்பில் மின் கட்டண பெயர் மாற்றம், மின் கட்டண மாற்றம், வீடுகளுக்கான புதிய மின் இணைப்பு, கூடுதல் மின் சுமை உள்ளிட்டவைகள் குறித்து 3522 மனுக்கள் பெறப்பட்டு, அதில் 1292 மனுக்களுக்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்கள்.

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பயனடைந்த மீனாட்சிபுரம் பகுதியை சேர்ந்த பயனாளி திரு.ராதாகிருஷ்ணன் அவர்கள் தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட மீனாட்சிபுரம் பகுதியில் வசித்து வருகிறேன். புதிய மின் இணைப்பு வேண்டி 29.07.2025 அன்று எ.எஸ். தங்வேல் மண்டபத்தில்



நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் விண்ணப்பித்தேன். ஆனால் மின்சார வாரியம் நிர்ணயித்துள்ள ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை எனவும், உரிய ஆவணங்களுடன் மின்வாரிய பிரிவு அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென அறிவுறுத் தினார்கள் அதனைத்தொடர்ந்து 31.08.2025 அன்று இணையதளம் வாயிலாக விண்ணப்பித்தேன். உடனடியாக புதிய மின் இணைப்பு பெற்றுள்ளேன். இவ்வாறு புதிய மின் இணைப்பு வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

**வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கன்னியாகுமரி மாவட்டம்**

# கால்நடைகளுக்கான இலம்பி தோல் நோய் (பெரியம்மை நோய்) தடுப்பூசி முகாம் இன்று முதல் 30.09.2025 வரை நடைபெற உள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

தேனி, செப்.03-

இலம்பி தோல் நோய் (Lumpy Skin Disease)இல் மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது. தேனி மாவட்டத்தில் உள்ள பசு மற்றும் எருமை இனங்களை பெரியம்மை நோயிலிருந்து காக்கும் வண்ணம் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் இலம்பி தோல் நோய் தடுப்பூசி போடும் முகாம்கள் நாளை 03.09.2025 முதல் 30.09.2025 வரை தேனி மாவட்டம் முழுவதும் நடைபெற உள்ளது.

இலம்பி தோல் நோய் (Lumpy Skin Disease)

இந்நோய் பெரியம்மை மற்றும் தோல் கழலை நோய் என்றும் அழைக்கப்படுகிறது. பெரியம்மை வைரஸ் நச்சுயிரியால் ஏற்படும் அம்மை வகையைச் சார்ந்த நோய் ஆகும். இந்நோய் பூச்சிக்கடி மூலம் பரவுகிறது. இந்நோய் தாக்கிய மாடுகளின் தோலின் மேல் கட்டிகள் தோன்றும். சில மாதங்களில் வடுக்கள் மறைந்து ரோமம் முளைத்து விடும். மாடுகளில் அதிகப்பாதிப்பை ஏற்படுத்தினாலும் இறப்பு விகிதம் குறைவாகவே இருக்கும் அதிக ஈரப்பதம் மற்றும் அதிக வெப்பநிலை காலங்களில் இந்த வகை வைரஸ் அதிகமாக பரவி கறவை மாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தும்.

நோய் பரவும் விதம்

கொசு, .ஈ, உண்ணி கடி மற்றும் பாதிக்கப்பட்ட மாடு மூலமாக இந்த நோய் பரவுகிறது. கோடைகால தொடக்கத்தில் இந்த நோய் அதிக அளவில் பரவுகிறது, கறவையாளர்கள் மூலமாகவும் பரவ வாய்ப்புள்ளது. கன்று குட்டிகள், பாதிக்கப்பட்ட மாட்டின் பாலை அருந்தும் போதும் நோய் தொற்று ஏற்படுகிறது. இந்த நோய் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து மாடு வாங்கி வந்தால் அதன் மூலமாகவும் பரவுகிறது. இந்த வைரஸ் கிருமியானது மாட்டின் தோல் மற்றும் காயங்களில் 18 முதல் 35 நாட்கள் வரை வாழும்.

நோய் அறிகுறிகள்

தோல் அம்மை நோயினால் பாதிக்கப்பட்ட மாடுகளின் உடலில் கரணை, தடிப்பு ஏற்பட்டு கொப்புளங்கள் குறிப்பாக தலை, கழுத்து, முதுகு, வயிற்றின் அடிப்பகுதி, கால், பால்மடி, இனப்பெருக்க உறுப்பு போன்ற இடங்களில் தோன்றும். நாளடைவில் இவை புண்களாக மாறி மாடுகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

பாதிக்கப்பட்ட மாடுகளில் காய்ச்சல், கண்களில் இருந்து நீர் வடிதல் மற்றும் மூக்கில் சளி ஒழுகுதல், கால்களில் வீக்கம் மற்றும் நிணநீர் சுரப்பிகள் பெரிதாக வீங்கி காணப்படும். மாடுகள் சோர்வடைந்து சரியாக தீவனம் உட்கொள்ளாமல் காணப்படும். கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறையும். சினை பிடிப்பதில் பாதிப்பு ஏற்படும். சினை மாடுகளில் கருச்சிதைவு ஏற்படும் மற்றும் வளர்ச்சி குறைபாடான கன்றுகள் பிறக்கும்.

தடுப்பூசி பணி

சிறந்த பராமரிப்பும், தடுப்பூசி போடுவதும் இந்நோயினை தடுக்க உகந்த வழி, தேனி மாவட்டத்தில் சுமார் 60,000 கால்நடைகளுக்கு தடுப்பூசி பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்திலுள்ள 53 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 3 கால்நடை மருத்துவமனைகளில் உள்ள கால்நடை மருத்துவர், உதவி கால்நடை மருத்துவர், கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் கொண்ட 47 குழுக்கள் அமைக்கபட்டு நாளை 03.09.2025 முதல் 30.09.2025 வரை தடுப்பூசிப்பணி இலவசமாக மேற்கொள்ளப்பட உள்ளது. இத்தடுப்பூசிப்பணி நான்கு மாதத்திற்கு மேல் உள்ள கன்றுகளுக்கும் மற்றும் சினை இல்லாத மாடுகளுக்கும் வருடத்திற்கு ஒரு முறை போடப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு தங்களது கிராமத்தில் எந்த நாட்களில் தடுப்பூசி பணி நடைபெறும் என்ற விவரம் முன்கூட்டியே சம்மந்தப்பட்ட கால்நடை மருந்தகத்தால் அக்கிராமத்திற்கு தெரிவிக்கப்படும் அல்லது பொது மக்கள் தங்கள் பகுதி கால்நடை மருத்துவமனை, கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை கிளை நிலையத்தை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். பெரியம்மை நோய் தடுப்பூசி முகாம் போடும் நாளில் விவசாயிகள் கால்நடை பராமரிப்புத்துறையினருக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி தவறாது தடுப்பூசி போட்டு கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

<u>மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில்</u>

# மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, 5 பயனாளிகளுக்கு மொத்தம் ரூபாய் 16.82 இலட்சம் மதிப்பீட்டிலான பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

சிவகங்கை, செப்.03-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.





மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களிடமிருந்து 335 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 1 மாற்றுத்திறனாளிக்கு ரூபாய் 3,66,600/ மதிப்பீட்டிலான நவீன செயற்கை கால்கள் மற்றம் ரூபாய் 15,750/ மதிப்பீட்டிலான சக்கர நாற்காலியினையும், தொழிலாளர் நலத்துறை (சமூக பாதுகாப்பு திட்டம்) சார்பில் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு தலா ரூபாய் 4,00,000/ வீதம் உதவித்தொகைக்கான ஆணைகளையும், 1 பயனாளிக்கு ரூபாய் 1,00,000/ மதிப்பீட்டில் பதிவு பெற்ற பெண் ஆட்டோ ஓட்டுநருக்கான மானிய உதவித்தொகைக்கான ஆணையினையும் என இன்றையதினம் 5 பயனாளிகளுக்கு மொத்தம் ரூபாய் 16,82,350/ மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ராஜா உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழகத்தில் செப்.7 வரை மழைக்கு வாய்ப்பு: சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, செப்.03-

தமிழகத்தில் செப்.7ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:




வடக்கு வங்கக்கடல் பகுதிகளில் செப்.2ம் தேதி (இன்று) காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும். தமிழகம் நோக்கி வீசும் மேற்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக, இன்றும், நாளையும் வட தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மணிக்கு 30 முதல் 40 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். செப்.4 முதல் 7ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் மிதமான மழை பெய்யக்கூடும்.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 40 முதல் 60 கி.மீ வேகத்தில் சூறாவளிக்காற்று வீசக் கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம். தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக மதுரை மாவட்டம் கள்ளந்திரியில் 6 செ.மீ, புதுச்சேரியில் 5 செ.மீ, மதுரை மாவட்டம் பெரியபட்டி, சென்னை பெரம்பூர், ஐஸ் ஹவுஸ், விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஆகிய இடங்களில் தலா 4 செ.மீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# திருப்பதி ஏழுமலையான் கோயில் பிரம்மோற்சவம் செப்.24ல் தொடக்கம்

திருமலை, செப்.03-

உலக பிரசித்தி பெற்ற திருப்பதி ஏழுமலையான் கோயிலில் இந்த ஆண்டு வருடாந்திர பிரம்மோற்சவம் வரும் 24ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. அன்று ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு பட்டு வஸ்திரங்களை சுவாமிக்கு காணிக்கையாக வழங்க உள்ளார். அன்றிரவு பெரிய சேஷ வாகனத்தில் ஸ்ரீதேவி, பூதேவி சமேதமாக மலையப்பர் வீதியுலா வருகிறார்.

செப்டம்பர் 25ம் தேதி காலை சின்ன சேஷ வாகன சேவையும், இரவு அன்ன வாகன சேவையும் நடைபெற உள்ளன. 26ம் தேதி காலை சிம்ம வாகனம், இரவு முத்துப்பல்லக்கு வாகனம், 27ம் தேதி காலை கற்பக விருட்சக வாகனம், இரவு சர்வ பூபால வாகனம், 28ம் தேதி காலை மோகினி அலங்கார சேவை, இரவு கருடசேவை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

6ம் நாளான 29ம் தேதி காலை அனுமன் வாகன சேவை, மாலை 4 மணிக்கு தங்க ரத ஊர்வலம், இரவு கஜ வாகன சேவை, 30ம் தேதி காலை சூரிய பிரபை, இரவு சந்திர பிரபை, அக்டோபர் 1ம் தேதி காலை தேர்த்திருவிழா, இரவு குதிரை வாகன சேவை நடைபெற உள்ளது.

நிறைவு நாளான அக்டோபர் 2ம்தேதி காலை 6 மணி முதல் 9 மணி வரை சக்கர ஸ்நான நிகழ்ச்சி நடைபெற உள்ளது. அன்றிரவு 8.30 மணிக்கு கொடியிறக்க நிகழ்ச்சியுடன் பிரம்மோற்சவம் நிறைவடைய உள்ளது. பிரம்மோற்சவ விழாவில் தினமும் காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும், இரவு 7 மணி முதல் 9 மணி வரையிலும் வாகன சேவைகள் நடைபெறும்.

# நீலகிரி மாவட்டம் மசினகுடி முதுமலை சாலையில் மக்னா யானை உயிரிழப்பு

நீலகிரி, செப்.03-

நீலகிரி மாவட்டம் மசினகுடி தெப்பக்காடு நெடுஞ்சாலைப் பகுதி ஊர்களில் ரேஷன் கடைகளை உடைத்து அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களை சாப்பிட்டு வந்த மக்னா யானை மர்மமான முறையில் சாலையிலேயே உயிரிழந்தது. ஜேசிபி வரவழைக்கப்பட்டு யானையின் சடலம் கொண்டு



செல்லப்பட்டது. யானை உயிரிழப்புக்கான காரணம் உடற்கூறாய்வுக்குப் பிறகே தெரியவரும் என வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.



# சிறப்பு சலுகையில் தரமான பொருள், மலிவான விலையில், பட்டாசு கடை திறப்பு மற்றும் விற்பனை தொடக்க விழா

வேலூர், செப்.03-

வேலூர் மாவட்டம், காட்பபாடி தாலுகா, விருதம்பட்டு அடுத்த வஞ்சூர் கூட்ரோட்டில், பட்டாசு கடை திறப்பு விழா, சிறப்பு சலுகையில், தரமான பொருள், மலிவான விலையில், பட்டாசு கடை திறந்து வைத்து முதல் விற்பனையை தொடங்கி வைத்தனர். இவ்விழா ஜே ஜே சங்கர் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக அதிமுக வேலூர் மாநகர மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.கே. அப்பு கலந்துகொண்டு ரிப்பன் வெட்டி, குத்துவிளக்கேற்றி முதல் விற்பனையை தொடங்கி வைத்தனர். சிறப்பு விருந்தினர்களாக காட்பாடி அதிமுக ஒன்றிய செயலாளர் சுபாஷ், மாவட்ட எம்ஜிஆர் அணி இணைச் செயலாளரும், வழக்கறிஞருமான ஜே.கே. எழிலரசு மற்றும் அதிமுக நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சிறப்பு அழைப்பாளருக்கும், சிறப்பு விருந்தினர்களுக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவித்து சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினர். இதில் ஜோதி பட்டாசு கடை உரிமையாளர் லதா சங்கர், ஜோதி ஐயப்பன், பச்சையம்மாள் மற்றும் அதிமுக நிர்வாகிகள் உறுப்பினர்கள், பொதுமக்கள், வாடிக்கையாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.




# தேசிய அளவிலான கிக் பாக்ஸிங் போட்டி சிவகங்கை வீரர்கள் சாதனை

சிவகங்கை, செப்.03-

சிவகங்கை வாக்கோ இந்தியா சார்பில் 2025ந்திற்கான தேசிய அளவிலான கிக் பாக்ஸிங் போட்டி, சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் 27 முதல் 31 வரை வெகு விமர்சையாக நடைபெற்றது, இதில் 28 மாநிலங்களில் இருந்து சப் ஜூனியர் 1500 வீரர் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றனர், இதில் தமிழ்நாடு கிக் பாக்ஸிங் அணி தமிழ்நாடு அமைச்சூர் கிக்பாக்ஸிங் சங்க பொது செயலாளர் திரு சுரேஷ் பாபு தலைமையில் 170 வீரர்கள் களம் இறங்கினர், இதில் சிவகங்கை வீரர்கள் சிவகங்கை கிக்பாக்ஸிங் சங்கம் சார்பில் கலந்து கொண்டு, 3 தங்கம் 6 வெள்ளி மற்றும் 6 வெண்கலம் வென்று சிவகங்கை மண்ணிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளனர் மேலும் தமிழ்நாடு அணி சிறுவர் பிரிவில் ஒட்டுமொத்த




சாம்பியன் பட்டத்தை வென்று முதல் இடத்தை பிடித்தது மகாராஷ்டிரா மற்றும் ஹரியானா அணிகள் இரண்டு மற்றும் மூன்றாம் இடத்தை பிடித்தது என்று சிவகங்கை மாவட்ட கிக்பாக்ஸிங் சங்க தலைவர் சதிஷ், மற்றும் பொருளாளர் உமாமகேஸ்வரி மகிழ்ச்சியுடன் தெருவித்தனர் மேலும் பொது செயலாளர் மற்றும் ஃபயர் ஸ்டோர்ம் பைட் கிளப் நிறுவனர் ச.குணசீலன், துணை செயலாளர் பெண் பயிற்சியாளர் சித்ரா ஆகியோர் கூறியதாவது இந்த போட்டியில் சிவகங்கை வீரர்கள் தங்கம் வென்று தமிழக அணிக்கு பெருமை சேர்த்திருப்பது மகிழ்ச்சி மற்றும் இடையமேலூர், தமராக்கி, கூட்டுறவுப்பட்டி ஆகிய ஊர்களில் அரசு பள்ளி மாணவர்கள் பதக்கம் வென்றிருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சி என்றும் இந்த கிக்பாக்ஸிங் விளையாட்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தினாலும் தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தினாலும் மற்றும் இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு என்பது குறிப்பிடத்தக்கது.

## தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமை

# தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா. ஆய்வு செய்து முகாமில் மனு அளித்து வரி பெயர் மாற்றம் பிறப்புச், இறப்பு சான்றிதழ் ஆகியவற்றையும் நலத்திட்ட உதவிகளையும் பொதுமக்களுக்கு வழங்கினர்

பெருங்களத்தூர் செப்.03-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி நான்காவது மண்டலத்துக்கு உட்பட்ட 54, 55வது வார்டில் பொது மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் முகாம் மேற்கு தாம்பரம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

முகாமை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்..ஆர்.ராஜா அவர்கள் ஆய்வு செய்தார் பின்னர் முகாமில் பொது மக்கள் மனு அளித்த உடனடி தீர்வு காண பட்டு வரி பெயர் மாற்றம், மின்சார அட்டைப் பெயர் மாற்றல், பிறப்பு இறப்பு. சான்றியிதழ்கள் ஆகியவற்றையும் மற்றும் நலத்திட்ட உதவிகளையும்



பொதுமக்களுக்கு வழங்கினர் .

இந்த முகாமில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, மண்டல குழு தலைவர் டி.காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள். எஸ்.சேகர். பி.புகழேந்தி, கழக பேச்சாளர் கருணாகரன், நல சங்க நிர்வாகி ரஞ்சன், நல சங்கம் நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் கலைஞரின் கனவு இல்லம் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி , செப்.03-

கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் கலைஞரின் கனவு இல்லம் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையிலான தமிழ்நாடு அரசு மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் தேவைகளுக்காக பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில் ஊரகப்பகுதியில் வசிக்கும்



வீடு இல்லாத ஏழை, எளிய மக்கள் பாதுகாப்புடன் வசிக்க வேண்டும் எனவும், அனைவருக்குமே பாதுகாப்பான நிரந்தர கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்காக கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தை அறிவித்து, இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ரூ.3.10 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட தோட்டமலை மலைவாழ் பகுதியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 22 வீடுகள், எட்டாங்குன்று மலைவாழ் பகுதியில் 11 வீடுகள் என மொத்தம் ரூ.1.49 கோடி மதிப்பில் 33 வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் தோட்டமலை மற்றும் எட்டாங்குன்று பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் வீடுகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தற்போது பூச்சு வேலைகள் நடைபெற்று வருகிறது. கட்டப்பட்டு வரும் வீட்டின் அடிப்படை வசதிகள், கட்டுமான பணிகளின் தரம் உள்ளிட்டவைகள் ஆய்வு மேற்கொண்டதோடு. கட்டுமான பணிகள் தொய்வின்றி நடைபெற பயனாளிக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் பணிகளை தரமானதாகவும். உறுதித்தன்மையுடன் அமைத்திடுவதை துறை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் .ஆர். அழகுமீனா, தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வில் திருவட்டார் வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேஷ் குமார். உதவி பொறியாளர் ஜினு ஆன்றனி. ஒன்றிய மேற்பார்வையாளர் .ஜோஸ் பிராங்கிளின், ஜஸ்டின், துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள். பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# அன்னை தெரேசா 115வது பிறந்தநாளை முன்னிட்டு மாற்றுத்திறனாளிக்கான மாரத்தான் போட்டி

பம்மல், செப்.03-

செங்கல்பட்டு மாவட்டம் பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் சார்பாக அன்னை தெரேசா அம்மா அவர்களுடைய 115வது பிறந்தநாளை முன்னிட்டு மாற்றுத்திறனாளிக்கான மாரத்தான் போட்டி 2025 சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் இ.கருணாநிதி, பம்மல் 1வது மண்டலம் தலைவர் வே.கருணாநிதி, செங்கல்பட்டு மாவட்டம் மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கதிர்வேல், கந்தசாமி த.வே.க, சாவித்ரி வழக்கறிஞர் பள்ளி, கோவிந்தாராஜ் சமூக ஆர்வலர், சத்தியமூர்த்தி சமூக ஆர்வலர், லதா கண்ணன் சமூக ஆர்வலர், பம்மல் வினோத் சமூக ஆர்வலர், ஆனந்தி சமூக ஆர்வலர், தமோதிரன் சமூக ஆர்வலர், லெனில் சமூக ஆர்வலர் அறக்கட்டளை இயக்குனர் பம்மல் கவிதா, தலைவர் பம்மல் காலா கவுரவ தலைவர் அருணாகிரி, செயலாளர் தேவி அனைத்து கிளை செயலாளர், மாற்றுத்திறனாளிக்காக பாதுகாப்புக்காக பம்மல் சங்கர் நகர் காவல் துறை அதிகாரிகள், ஜெயின் மருத்துவ செவிலியர் மற்றும் ஆம்புலன்ஸ் ஊழியர் மாற்றுத்திறனாளி உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர், பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



# SM கிரிக்கெட் அகாடமி டைமண்ட் லேடி சாம்பியன்ஸ் டிரோபி சீசன் -4, 2025 இறுதிப் போட்டி நடைபெற்றது

செங்கல்பட்டு, செப்.03-

செங்கல்பட்டு தாம்பரம் அடுத்த வேங்கை வாசல் சுமங்கலி ரெட்டி டர்ஃப் மைதானத்தில் நடைபெற்ற SM கிரிக்கெட் அகாடமி டைமண்ட் லேடி சாம்பியன்ஸ் டிரோபி சீசன்-4, 2025 இறுதிப் போட்டியில், சிகரம் ஸ்போர்ட்ஸ் கிளப் நான்கு விக்கெட் வித்தியாசத்தில் பிலீவை வீழ்த்தி கோப்பையை கைப்பற்றியது.

டாஸ் வென்று பீல்டிங்கைத் தேர்வு செய்த சிகரம், தமது சிறப்பான பந்து வீச்சால் பிலீவ் அணியை 100 ரன்களுக்கு 29.3 ஓவர்களில் சுருட்டியது. கேப்டன் கவிதா ராம் 34, 70 பந்துகள் மட்டுமே நீண்ட நேரம் நிலைத்தார். சுஜி பி (2/13), ஸ்வாகதா டி (2/16), ஹாசினி பிரின்ஸ் (2/18) ஆகியோர் பந்து வீச்சில் சிறந்து விளங்கினர்.

101 ரன்களைத் துரத்தி ஆடிய சிகரமும் எளிதில் முன்னேறவில்லை. ஆனால் கிதிகா ஜ்யோத்ஸ்னா (30), ஹன்சிகா பி (24) ஆகியோரின் நிதானமான ஆட்டத்தால், அணி 29 ஓவர்களில் 101/6 என இலக்கை எட்டியது. இதன் மூலம் சிகரம் சாம்பியன் பட்டத்தை வென்றது.

இத்தொடரை சிறப்பாக நடத்தித் தந்த முருகன் அவர்களுக்கு அனைத்து அணிகளும் தங்களது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்தனர்



■ மக்கள் குறைகளை வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் வகையில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைப்படி நாகர்கோவில் மாநகராட்சி 18 வது வார்டு பகுதி பொதுமக்களுக்கு பள்ள விளை புனித செபஸ்தியார் சமூக நலக்கூடத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் மாநகராட்சி ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா பார்வையிட்டு பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்று நிறை குறைகளை கேட்டறிந்தார். உடன் மண்டல தலைவர் செல்வகுமார் மாமன்ற உறுப்பினர் .அமல செல்வன் மாநகராட்சி நல அலுவலர் Dr. ஆல்பர் மதியரசு. பகுதி செயலாளர் சேக் மீரான். தி மு க நிர்வாகிகள் பஷீர், ராஜன், முகமது சாலிஹ் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் தி மு க நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 15 வது வார்டுக்குட்பட்ட தேவசகாயம் தெருவில் ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர்.ரெ.மகேஷ். தொடங்கி வைத்தார். உடன் துணை மேயர் மேரி பிரின்ஸி லதா மண்டல தலைவர் ஜவஹர் மாமன்ற உறுப்பினர் லீலாபாய் வட்ட செயலாளர் ரெஞ்சித் .தி மு க நிர்வாகிகள் ஜார்ஜசிங், சைமன் ராஜ், ஜனார்த்தனன் ஜெபமணி மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் தி மு க நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேரூர் நெல் கொள்முதல் நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, செப்.03-

கன்னியாகுமரி மாவட்ட வேளாண்மைத்துறையின் கீழ் செயல்பட்டுவரும் தேரூர் நெல் கொள்முதல் நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மை துறையின் கீழ் கிருஷ்ணன்கோவில், பறக்கை, புத்தளம், தேரூர், செண்பகராமன்புதூர், தாழக்குடி, திட்டுவிளை, சிறமடம், கடுக்கரை, திங்கள்நகர் ஆகிய 10 நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. அதன் ஒருபகுதியாக இன்று தேரூர் நெல் கொள்முதல் நிலையத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தேரூர் மற்றும் அதை சார்ந்துள்ள பகுதிகளில் நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்டு வருகிறது . அதனைத்தொடர்ந்து தேரூர் நேரடி முதல்



நிலையம் 01.09.2025 முதல் தொடக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. விவசாயிகள் தற்போது அதிகப்படுத்தப்பட்டுள்ள குறைந்தபட்ச ஆதார விலையான சாதாரண ரகங்களுக்கு குவிண்டாலுக்கு ரூ.2500 மற்றும் சன்ன ரகங்களுக்கு ரூ.2545 என்று உயர்த்தப்பட்டுள்ளது.

நெல் கொள்முதல் விலையில் அதிக லாபம் பெறுவதற்கு விவசாயிகள் தேரூர் நெல் கொள்முதல் நிலையத்தை பயன்படுத்திட வேண்டும். அதற்கான உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என வேளாண்மை இணை இயக்குனர், உதவி இயக்குனர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் ஆகியோருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் (பொ) திரு.ஜென்கின் பிரபாகர், உதவி இயக்குனர் (அகஸ்தீஸ்வரம்) திரு.சுனில் தத், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் திருமதி. கலைமதி, துணை மண்டல மேலாளர்கள், வேளாண்மை துறை களப்பணியாளர்கள், நுகர்பொருள் வாணிபக் கழக களப்பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161